10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 277 ஞாயிற்றுக்கிழமை 25 பெப்ரவரி 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48

## கூட்டமைப்பின் ஆட்சிக்கு ஆதரவு

### சுரேஷ் அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.25

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைக்க வெளியிலிருந்து ஆதரவு கொடுப்போம் என ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவர் சுரேஸ் பிறேமச்சந்திரன் அறிவித்துள்ளார். 06▶





# சம்பந்தன், சுமந்திரனுக்கு வவுனியாவில் இறுதிக்கிரியை

## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் செய்தனர்

வவுனியா, பெப். 25

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சம்பந்தன், சுமந்திரனுக்கு இறுதிக்கிரியைகள் செய்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர் காணாமல் ஆக்கப்படோரின் உறவுகள்.

போர்க் காலத்தில் கடத்தப்பட்டும், கையளிக்கப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் தொடர்ச்சியான சுழற்சி முறை உண்ணாவிரதப் போராட்டம் நேற்று ஒரு வருடத்தை நிறைவு செய்தது.

இதையொட்டி கவனயீர்ப்புப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டனர். வவுனியா கந்தசாமி கோவிலில் வழிபட்ட காணாமல் ஆக்கப்பட்டடோரின் உறவினர்கள் ஆலயத்தின் முன்பாக ஒன்றுகூடி பதாதைகளில் பொறிக்கப்பட்டிருந்த தமது பிள்ளைகளின் புகைப்படங்களை பார்த்து ஒப்பாரி வைத்து அழுதனர்.

பின்னர், அங்கிருந்து ஊர்வலமாக நகர்ந்த உறவுகள் போராட்டம் நடத்தி வரும் தபால் அலுவலகம் அருகே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தர் மற்றும் சுமந்திரனின் உருவ பொம்மைகளை தாங்கியவாறு முச்சந்தி நோக்கி சென்றவர்கள், இரு உருவ பொம்மைகளையும் வைத்து இறுதிக் கிரியைகள் செய்தனர். இந்தப் போராட்டங்களில் பல தரப்பினரும் கலந்துகொண்டனர். (ச)

## விஜயதாச ராஜபக்ச மீண்டும் அமைச்சர்?



கொழும்பு,பெப்.25,

விஜயதாச ராஜபக்ச மீண்டும் அமைச்சராகிறார் என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன. அமைச்சரவை மாற்றம் இன்று இடம்பெறவுள்ளது. இதன்போதே அவருக்கு அமைச்சுப் பொறுப்பு வழங்கப்படவுள்ளது. 06▶

## இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி மரணம்



கொழும்பு, பெப். 25

இலங்கைக்கான ஐ.நாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி உனா மக்கோலி திடீரென மரணமானார். ஐ.நாவின் 06▶

# வாக்குறுதிகளை நிறைவேற்றுக!

## தமிழரசுக் கட்சி வலியுறுத்து

கொழும்பு, பெபரவரி. 25

'தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முகமாகவும் நிலையான சமாதானத்தை ஏற்படுத்தும் முகமாகவும் இலங்கை அரசாங்கம் சர்வதேசத்திற்கு வழங்கிய உத்தரவாதங்களை கடுமையாகப் பின்பற்ற வேண்டும் என வலியுறுத்தி நிற்கின்றோம்."

என்று கூறியுள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி. கொழும்பில் நேற்று அக்கட்சி நடத்திய மத்திய செயற் குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

மேலும், 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை 06▶

## முதல்வரின் செருப்பு கிளப்பியது சர்ச்சை

யாழ்ப்பாணம், பெப். 25

பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் தனது செருப்பை எடுத்துத் தருமாறு கோரிய முதலமைச்சரின் செயல் சமூக வலைத்தளங்களில் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

அரசியல் ஆய்வாளர் மு. திருநாவுக்கரசுவின் நூல் வெளியீடு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் பிரதம 06▶

## சி.ஐ.டியினரின் கண்காணிப்புடன் திருநாவுக்கரசுவின் நூல் வெளியீடு



யாழ்ப்பாணம், பெப். 25

சி.ஐ.டியினரின் கண்காணிப்புக்கு மத்தியில் பிரபல அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு எழுதிய 'பூகோளவாதம் புதிய தேசிய வாதம்" நூல் வெளியீட்டு விழா நேற்று இடம்பெற்றது.

வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் பா.செயப்பிர 06▶

## மனித உரிமை ஆணையர் இலங்கை மீது அதிருப்தி




கொழும்பு, பெப். 25

இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் சயீட் அல் ஹூசைன் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் ஆகியவற்றை ஊக்குவிப்பதில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தொடர்ந்தும் முக்கிய பங்கை ஆற்றவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

காணிகளை விடுவித்தல், பயங்கரவாத 06▶



# அந்தோனியார் பெருவிழாவில் அலையென திரண்ட பக்தர்கள்

கச்சதீவு, பெப்.25

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த பெருவிழா நேற்று மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நேற்றுக் காலை யாழ்.மறை மாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானபிரகாசம் மற்றும் காலி மறை மாவட்ட ஆயர் றேமன் விக்கிரமதுங்க தலைமைத்துவத்தில் திருப்பலி ஒப்புகொடுக்கப்பட்டு திருவிழா புனிதமாக முன்னெடுக்கப்பட்டு நிறைவடைந்தது.

வரலாற்றில் முதன்முறையாக சிங்கள மொழியில் ஆராதனைகள் இடம்பெற்றதோடு இந்தியாவிலிருந்து தேக்கு மரத்திலான புதிய கொடி மரம் கொண்டு வரப்பட்டு கொடியேற்றி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் 62 படகுகளில் 1,968 பேர் இந்தியாவில் இருந்தும், இலங்கையில் இருந்து 6,182 பேரும் பங்கேற்றுள்ளனர். இவர்களுக்கான குடிநீர் வசதி, தங்குமிட வசதி உள்ளிட்ட ஏனைய அனைத்து வசதிகளையும் யாழ் மறை மாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானபிரகாசம் உதவியுடன், யாழ் உள்ளூராட்சி மன்றங்களின் அனுசரணையுடன் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் புனித அந்தோனியார் ஆலய திருவிழாவில் பங்கேற்ற இந்திய மற்றும் இலங்கை பக்தர்களுக்கான உணவு இலங்கை கடற்படையால் நேற்றிலிருந்து வழங்கப்பட்டது. இங்கு வந்த பக்தர்கள் தங்களுக்குள் உணவுகளையும் இனிப்புக்களையும் தங்களுக்குள் பரிமாறிக்கொண்டனர்.

கடந்த வருடம் கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழாவிற்கு இந்திய பக்தர்கள் அனுமதிக்கப்படவில்லை அதனால் இவ் வருட திருவிழாவிற்கு இந்திய பக்தர்கள் மிகவும் ஆர்வத்தோடும் மகிழ்ச்சியோடும் கலந்து கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ரயில் சேவை சீரானது

கொழும்பிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த ரயில் தடம் விலகியதால் தடைப்பட்டிருந்த மலையக ரயில் போக்குவரத்து நேற்று வழமைக்குத் திரும்பியுள்ளது.

குறித்த நானுஓயா ரயில் நிலையத்தில் தற்காலிகமாக ஒரு புறம் மட்டும் ரயில் சேவை இடம்பெறும் எனவும், இரண்டாவது ரயில் ஓடு பாதை மறுசீரமைக்கப்படுவதாகவும், அதன்பின் வழமைப்போன்று ரயில் சேவைகள் இடம்பெறும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொழும்பு நோக்கிச் சென்ற உடரட மெனிக்கே என்ற ரயில் நேற்றுக் காலை வழமைபோன்று புறப்பட்டுச் சென்றதாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் குறிப்பிட்டுள்ளது. (அ)

## அர்ஜுன் அலோசிஸ் மருத்துவமனையில்


கொழும்பு, பெப்.25

மத்திய வங்கி பிணை விநியோக மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பேர்ச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் பேர்ச்சுவல்ட்ரசரீஸ் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன ஆகியோர் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிறைச்சாலைகள் திணைக்களம் இதனைக் கூறியுள்ளது.

அவர்கள் இருவரும் எதிர்வரும் மார்ச் 2ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## விடுதலையை விரைவாக்குங்கள் அரசியல் கைதிகள் கோரிக்கை



கொழும்பு, பெப்.25

அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலை தொடர்பில் உரிய தலைவர்களுடன் கதைத்து விடுதலையை துரிதப்படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளதாக வட மாகாண சபை உறுப்பினர் எஸ்.பிரிமூஸ் சிறாய்வா தெரிவித்தார்.

அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட் தந்தை ஞானப்பிரகாசம் அடிகளார், மன்னார் மெதடிஸ்த திருச்சபையின் போதகர் ஜெகதாஸ் அடிகளார் மற்றும் வட மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.பிரிமூஸ் சிறாய்வா ஆகியோர் நேற்று காலை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

நாங்கள் அனுராதபுரம் சிறைச்சாலைக்கு சென்று தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை சந்தித்து கலந்துரையாடினோம். அவர்கள் தமது விடுதலையை வலியுறுத்தி பல்வேறு கருத்துக்களை முன் வைத்தனர்.

குறிப்பாக சிலரது வழக்கு விசாரணைகள் காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் சிலரது வழக்கு விசாரணைகள் நீதிமன்றத்தினால் கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், சிலரது விசாரணைகள் அனுராதபுரம் நீதிமன்றத்தில் இடம் பெற்று வருகின்ற போதும் குறித்த வழக்கு விசாரணையில் என்ன நடக்கிறது என்பது தொடர்பில் தமக்கு எதுவுமே தெரியாது என்றும் அவர் தமது ஆதங்கத்தை கைதிகள் வெளிப்படுத்தியிருந்தனர்.

## 10 தங்கக் கட்டிகளுடன் கட்டுநாயக்காவில் மூவர் கைது

கொழும்பு, பெப்.25

55 இலட்சம் ரூபா பெறுமதியான 10 தங்க கட்டிகளுடன் இந்திய பிரஜைகள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த மூவரும் நேற்று முன்தினம் பிற்பகல் SG 004 எனும் இந்திய தனியார் விமான சேவை விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து மதுரை நோக்கி பயணிக்க இருந்த நிலையில், கைது செய்யப்பட்டுள்ளனர். 48, 52, 52 வயதுடைய குறித்த சந்தேகநபர்களால் கொண்டு வரப்பட்ட கைப்பையை கதிர்சோதனைக்குட்படுத்தப்பட்டபோது, அதில் மறைத்து வைக்கப்பட்ட சந்தேகத்திற்கிடமான பொருட்கள் அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, மேற்கொண்ட சோதனையில் சுமார் 100 கிராம் கொண்ட 10 தங்கக் கட்டிகள் காணப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. அதன் மொத்த நிறை 916.25 கிராம் எனவும் அதன் பெறுமதி ரூபா 5,497,500 எனவும்கணக்கிடப்பட்டுள்ள தாக சுங்க திணைக்களத்தின் பிரதி பணிப்பாளர் விபுல மினுவன்பிட்டிய தெரிவித்தார்.

## ஆட்சி அமைக்கும் எண்ணமில்லை

### மகிந்த தரப்பு 'பல்டி'

கொழும்பு, பெப்.25

உள்ளூராட்சி சபைத் தேர்தல் வெற்றியின் ஊடாக மத்திய அரசை கவிழ்த்து புதிய ஆட்சியை அமைக்கும் திட்டம் எம்மிடமில்லை.இந்த வெற்றியின் ஊடாகப் பயணித்து நாடாளுமன்றத் தேர்தலை வெற்றி கொள்வதும் மகிந்தவை பிரதமராக்குவதுமே எமது ஒரே திட்டம் என்று மகிந்த அணி எம்.பியான திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

"உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பின் தேசிய அரசைக்"கலைத்துவிட்டு தனி அரசை அமைக்கப் போவதாக சுதந்திரக் கட்சியினர்தான் தேர்தல் மேடைகளில் கூறினர்.பிரதமர் ரணில் விக்ரமசிங்க திருடன் என்று ஜனாதிபதி கூறினார். அவரை விரட்ட வேண்டும் என்று சுதந்திர கட்சிக்காரர்கள் கூறினர்.

ஐக்கிய தேசிய கட்சியைப்போல் மோசமான கட்சி ஒன்று இல்லை என்பதுபோலவே பேசினர்.ஆனால், இப்போது தலைகீழாக மாற்றிப் பேசுகின்றனர். ஒட்டி உறவாடுகின்றனர்.தேசிய அரசு தொடரும் என்கின்றனர்.இவர்களின் அரசியல் நிலைப்பாடு இதுதான். இதனை விளங்கியதால்தான் மக்கள் இந்தத் தேர்தலில் நல்லதொரு பாடத்தை இவர்களுக்கு புகட்டினர்.

சுதந்திரக் கட்சி தனித்து ஆட்சி அமைத்தால் எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு அரசின் நல்லவற்றுக்கு மாத்திரம் ஆதரவு வழங்குவோம் என்ற நிலைப்பாட்டில் எமது கட்சி தொடர்ந்தும் உள்ளது" என்று அவர் தெரிவித்தார். (அ)

# நிறைவேற்றதிகாரத்தை ஒழிக்க ஐ.தே.க தயாராம்

கொழும்பு, பெப்.25

"எல்லோரும் ஒத்துழைப்பு வழங்கினால் இப்போதே நாம் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்குத் தயார்" என்று ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அக்கட்சியின் எம்பி நளின் பண்டார கூறியவை வருமாறு:

"உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்கள் எமக்கு வழங்கிய தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறோம்.நாம் விட்ட பிழைகளை திருத்திக்கொண்டு நாம் பயணிப்போம். மகிந்த தரப்பினர் அடைந்திருக்கும் வெற்றியை உண்மையான வெற்றியாக ஏற்றுக் கொள்ள முடியாது.இதை அவர்கள் உள்ளூராட்சி சபைத் தேர்தலாக எடுத்துக்கொண்டிருந்தால் வெற்றியாக ஏற்கலாம். ஆனால்,அவர்கள் அதை சர்வஜன வாக்கெடுப்பாகவே எடுத்துக்கொண்டனர்.

சர்வஜன வாக்கெடுப்பில் 50 வீதத்தைத் தாண்டியே வெற்றியைப் பெற வேண்டும்.ஆனால்,மகிந்த தரப்பினர் பெற்றிருப்பதோ 44 வீத வெற்றி. அதுமட்டுமல்ல கடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடுகையில் எட்டு இலட்சம் வாக்குகளை மகிந்த இழந்துள்ளார்.

இந்தத் தேர்தலை அரசைக் கவிழ்க்கும் தேர்தல் என்றும் சர்வஜன வாக்கெடுப்பென்றும் இவர்கள் கூறினார்கள்.இதில் எதுவும் நடக்கவில்லை. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் இவர்களால் வெல்ல முடியாது. ஆனால்,நாம் வெற்றி பெறுவோம்

ஒருவேளை நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்தால் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறாமல் போகலாம். எல்லோரும் ஒத்துழைப்பு வழங்கினால் இப்போதே நாம் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்குத் தயார். இல்லையென்றால் தேர்தலை எதிர்கொண்டு வெற்றியை அடைவோம்" என்றார் அவர். (அ)

எதிரொலி
Ethiroli
ஞாயிறு 25 பெப்ரவரி 2018 ethirolimedia@gmail.com

# வெற்றியை மறக்கடித்த குழப்பம்

ஒரு கோட்டை மறையச் செய்ய வேண்டுமாயின், அதற்குப் பக்கத்தில் பெரிதாக இன்னொரு கோட்டை வரையவேண்டும். இதையே சின்னகோடு, பெரிய கோடு யுக்தி என்பார்கள். உலகிலேயே அதிகமாகப் பிரயோகிக்கப்படும் யுக்தியும் இதுதான்.

இந்தத் தந்திரத்தையே இப்போது நல்லாட்சி அரசும் பிரயோகிக்கத் தொடங்கியுள்ளது. ஆட்சிக்கு வரும் போது, 100 நாட்களுக்குள் ஊள்ளூராட்சித் தேர்தலை நடத்துவோம் எனச் சொல்லிய நல்லாட்சி அரசு, பின்னர் அதனை நடத்தாமல் காலத்தை இழுத்தடிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். எல்லை நிர்ணயம், தேர்தல் திருத்தச் சட்டம் எனப் பல சாட்டுக்களைச் சொல்லிச் சொல்லியே இந்தத் தேர்தலை தள்ளிப்போட்டார்கள். இதற்குக் காரணம், அவர்களுக்குத் தெரிந்திருந்தது. என்னதான் இரு பிரதான கட்சிகளும் இணைந்து, தேசிய அரசு என்ற பந்தத்தில் கூடிக் குலாவினாலும், தேர்தல் என்று வரும் போது, கூட்டாகப் போய் வாக்குக் கேட்க முடியாது. ஏனெனில் என்றைக்குமே ஒன்றாக முடியாத கொள்கையைக் கொண்டவை அவ்விரு கட்சிகளும். எனவே தனித்தனியாகவோ அல்லது பிற கட்சிகளோடு சேர்ந்து வெவ்வேறான கட்சிகளிலேயே ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் தேர்தலைச் சந்திக்க முடியும். அப்படி நடந்தால், அது இரு கட்சிகளுக்குமே சாதகமாக அமையாது.

ஏற்கனவே நாடாளுமன்றத் தேர்தலில் , மகிந்த எதிர்ப்பு அலை, மைத்திரி 'எளிமை' மீதான மையல், அத்தியாவசியப் பொருள்களின் விலைக் குறைப்பு என்பன போன்ற பல சாதகமான புள்ளிகள் இருந்தும் கூட, ஐ.தே.க பெரும்பான்மையினைப் பெற முடியவில்லை. சுதந்திரக் கட்சியோ , ஐ.தே.க வை விடவும் குறைவான ஆசனங்களையே பெற முடிந்தது.

இந்தலட்சணத்தில், உள்ளூராட்சித்தேர்தலைநடத்தினால், அது மூன்றாவது அணியாகக் களமிறங்கக் காத்திருந்த பொது எதிரணிக்குச் சாதகமாகி விடலாம் என்பதாலேயே உள்ளூராட்சித் தேர்தலை நல்லாட்சி அரசு தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தது. ஆனால் பல்வேறு அழுத்தங்களாலும், இனிமேலும் தள்ளிப் போட முடியாது என்ற இக்கட்டு நிலையாலும்,வேறுவழியின்றி உள்ளூராட்சித் தேர்தலை அரசு நடத்தியது. ஆனால், பலரும் கணித்ததை விடவும் அதிகளவான சபைகளை மகிந்த ஆதரவுக் கட்சியான பொதுஜன பெரமுன கைப்பற்றியது. இது சோர்ந்திருந்த மகிந்த தரப்பினை வீறு கொண்டு எழ வைத்தது. இந்த எழுச்சி அலையின் தாக்கம் மக்களிடையே நீடித்தால், அது இன்னும் இரண்டு வருடங்களில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலிலும் மகிந்த அணியை வெல்லச் செய்துவிடும். ஆகவே மகிந்தவின் வெற்றிஅலையைமழுங்கடிக்கநல்லாட்சிஅரசு,சின்னக்கோடு, பெரிய கோடு உத்தியைக் கையில் எடுத்தது.

ஆட்சி மாற்றம் நிகழ்ப்போவதாகவும், ஐ.தே.க தனித்து ஆட்சியமைக்கப் போவதாகவும், சுதந்திரக் கட்சியும் மகிந்த அணியும் இணைந்து புதிய அரசை உருவாக்கவுள்ளதாகவும் இருவேறு கதையாடல்கள் உருப்பெற்றன. அத்தோடு அதனை நம்பச் செய்வது போல, இந்த மூன்று தரப்பினரும் மாறி, மாறி பேச்சுவார்த்தைகளில் இரவிரவாக ஈடுபட்டன. கட்சி மாறக் கூடிய எம்.பிக்களுக்கு விலை பேசல்கள் பகிரங்கமாக நடந்தன. இவையெல்லாவற்றுக்கும் உச்சமாக, ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியில் இருந்து விலக்கும் அதிகாரம் தனக்கு உண்டா, இல்லையா என்று ஜனாதிபதி மைத்திரிபால, சட்ட ஆலோசனை கேட்டிருந்தார். இவையெல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்ததில், மக்கள் மகிந்த தரப்பின் பெரு வெற்றியை மறக்கத் தொடங்கிவிட்டார்கள். அப்படி மக்கள் தாமரை மொட்டின் வெற்றியை மறக்கத் தொடங்கியதை உறுதிப்படுத்திய பின்னே தான், தேசிய அரசு தொடரும் என்ற அறிவிப்பு வந்திருக்கிறது. எஞ்சியுள்ள இரு வருடங்களும், மகிந்த தரப்பின் செல்வாக்கைக் குறைத்து தம்முடைய வாக்கு வங்கியை அதிகரிக்க ஐ.தே.கவும். சுதந்திரக் கட்சியும் முயலப் போகின்றன என்பதை இன்று நடக்கப்போகும் அமைச்சரவை மாற்றம் தெளிவாகச் சொல்லப்போகின்றது.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# ஓட்டோ கட்டணமும் எகிறியது

கொழும்பு, பெப்.25,

முச்சக்கரவண்டியின் உதிரிப் பாகங்களின் விலை அதிகரித்துள்ளதால் ஆரம்ப கிலோமீட்டருக்கான பயணக் கட்டணமாக அறவிடப்பட்டு வந்த 50.00 ரூபா 60.00 ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தேசிய முச்சக்கரவண்டி சம்மேளனத்தின் தலைவர் சுனில் ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த கட்டண அதிகரிப்பு எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் எனவும் அவர் தெரிவித்தார். உதிரிப் பாகங்களின் விலையைக் குறைக்குமாறு பல தடவைகள் போக்குவரத்து அமைச்சுக்கும் நிதி அமைச்சுக்கும் நியாயங்களைச் சமர்ப்பித்தும் இதுவரையில் எந்தவொரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படாததனால், இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், இரண்டாவது கிலோ மீட்டருக்கான கட்டணமும் 10.00 ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (இ)

# அரசாங்கம் இப்போதும் உள்ளதா? மகிந்த கிண்டல்

கொழும்பு, பெப்.26,

நாட்டில் தற்போது அரசாங்கம் என்று ஒன்று உள்ளதா என்பது தெரியவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். ஹொரணை பிரதேசத்தில் வைத்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தேசிய அரசாங்கத்திற்கு அன்று இருந்த பலம் தற்போது இல்லை அரசாங்கம் தற்போது நிலையற்று இருக்கிறது. நாட்டில் தற்போது அரசாங்கம் ஒன்று இருக்கின்றதா என்பதில் கூட தெளிவில்லை. தேசிய அரசாங்கம் தொடர்பான எழுத்து மூல உடன்படிக்கை தற்போது நிறைவடைந்துள்ளது. உடன்படிக்கை தொடர்பில் எதையும் அவர்கள் வெளியிடுவதில்லை என்றும் கூறியுள்ளார்.

கடந்த மூன்றாண்டுகளாக இந்த அரசாங்கத்தால் செய்ய முடியாதவற்றை இந்த ஆண்டில் எவ்வாறு செய்ய முடியும் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (இ)

# பிரியங்க அழைக்கப்பட்டது அவரது பாதுகாப்புக்காகவே

## சொல்கிறார் இராணுவத் தளபதி

வவுனியா, பெப்.25,

பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தில் சேவையாற்றிய பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவின் பாதுகாப்பு கருதியே அவர் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டார்.

இந்த விவகாரம் தொடர்பில் நாட்டு மக்கள் தேவையற்ற பயத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர் என இராணுவத் தளபதி மகேஷ் சேனாநாயக்க தெரிவித்துள்ளார். வவுனியாவில் அமைந்துள்ள வன்னி பாதுகாப்பு படையின் 56 ஆவது படைப்பிரிவின் புதிய அலுவலக கட்டட திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தியத்தலாவையில் கைக்குண்டு வெடித்திருப்பதாக தெளிவுபடுத்தப்பட்டிருப்பதாகவும் குறித்த சம்பவம் தொடர்பில் மேஜர் ஜெனரல் ஒருவர் உள்ளிட்ட 6 பேர் அடங்கிய குழு மூலம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும், பஸ் குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பில் பொதுமக்கள் அச்சமடைய தேவையில்லை எனவும் குறித்த சம்பவமானது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தவில்லை எனவும் இராணுவ தளபதி தெரிவித்துள்ளார். (இ)

# 200 அடி குழியில் வீழ்ந்து ஒருவர் பலி

மதவக்குளம், பெப்.25,

சைக்கிள் ஒன்று கற்குழிக்குள் விழுந்ததில் ஒருவர் உயிரிழந்தார். நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் ஆடிகம, மதவக்குளம், வெட்டிய பிரதேசத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது. மதவக்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடைய செபஸ்டியன் என்பவரே சம்பவத்தில் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர், சைக்கிளில் சென்று கொண்டிருக்கும் போது திடீரென்று சுமார் 200 அடி பள்ளமான கற்குழிக்குள் விழுந்தார் எனத் தெரிய வந்துள்ளது. சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் சிலாபம் பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட பின்னரே உயிரிழந்தார். உயிரிழந்தவரின் வீட்டிற்கு அருகிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த வருடங்களில் ஆடிகம, வெட்டிய பிரதேசத்தில் கல் உடைக்கும் நடவடிக்கை தொடர்ந்து வந்துள்ளதால் பல இடங்களில் இதுபோன்ற அகழிகள் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த சில மாதங்களில் இது போன்ற கற்குழிக்குள் விழுந்து மூன்று பேர் உயிரிழந்திருப்பதாகவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.(இ)

## பொலிஸாரின் திடீர் சுற்றிவளைப்பில்

# நாடு முழுவதும் 2504 பேர் சிக்கினர்

கொழும்பு, பெப்.25,

நேற்று அதிகாலை 2 மணி முதல் காலை 6மணி வரை நாடளாவிய ரீதியில் வீதித் தடைகளை ஏற்படுத்தி பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில் மொத்தமாக 2564 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர கூறினார்.

இதன்போது கைது செய்யப்பட்டவர்களில் குடிபோதையில் வாகனம் செலுத்திய 504 பேர் மற்றும் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 720 பேரும், ஹெரோய்ன் மற்றும் வேறு விதமான போதைவஸ்துக்களை வைத்திருந்த 524 பேரும் அடங்குவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் கைது செய்யப்பட்டவர்களுள் சட்டவிரோதமான முறையில் துப்பாக்கி வைத்திருந்த 4 பேரும் வேறு பல குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட 741 பேரும் உள்ளடங்குகின்றனர். அதேவேளை வாகனப் போக்குவரத்து விதி மீறல் சம்பந்தமாக 4735 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார். (இ)

# உவரடைந்தது களு கங்கை ! வறட்சியே காரணமாம்.

களுத்துறை, பெப்.25,

நாட்டில் தற்போது நிலவுகின்ற வறட்சியான காலநிலை காரணமாக களு கங்கையின் நீர் மட்டம் விரைவாக மாற்றமடைந்திருப்பதால் கடல் நீர் களு கங்கையின் நீருடன்கலந்திருப்பதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை கூறியுள்ளது.

இதன் காரணமாக களு கங்கையின் நீர் பல பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு அருந்துவதற்கு தகுதியற்றதாக காணப்படுகின்றது. எனினும் நாளாந்த ஏனைய தேவைகளுக்கு அந்த நீரைப் பயன்படுத்த முடியும் என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

வாத்துவை, களுத்துறை வடக்கு, களுத்துறை தெற்கு, நாகொட, போம்புவல, பிலிமினாவத்த, பயாகலை, மக்கோனா, பேருவளை, அளுத்கம, தர்கா நகர் மற்றும் பெந்தர பிரதேச மக்கள் இது தொடர்பில் மிகுந்த அவதானம் செலுத்த வேண்டும். குறித்த பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கு தேவையான குடிநீரை பவுசர் மூலமாக விநியோகம் செய்து பொது இடங்களில் நீர் தாங்கிகள் வைத்து வழங்குவதற்கு நீர் வழங்கல் சபை நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ)

## இன்று நாளும் கோளும்

25.02.2018 ஞாயிற்றுக்கிழமை ஏவிளம்பி வருடம் மாசி மாதம் 13 ஆம் நாள்

தசமி பகல் 05.38 மணி வரை
மிருகசீரிடம் பகல் 07.27 மணி வரை
திருவாதிரை பகல் 04.27
இராகுகாலம் 04.30 - 06.00
சுபநேரம் மு.ப. 06.30 - 07.30
எமகண்டம் பகல் 12.00 - 01.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆதரவு | சோதனை | சிரமம் | கவலை | வெற்றி | நன்மை | பயம் | இலாபம் | செலவு | சுகம் | அமைதி | போட்டி |

# தேசிய அரசு தொடர்பில் எவரும் கேட்கமுடியாது

கொழும்பு, பெப்.25

தேசிய அரசில் இருந்து தாம் விலகுவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்துக்கு வந்து அறிவித்தால் மாத்திரமே தேசிய அரசு முடிவுக்கு வரும். அதுவரை அரசு தொடரும். எவரும் இது தொடர்பில் கேள்வி எழுப்ப முடியாது என்று பிரதி அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். தேசிய அரசு தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகள் தொடர்பில் கருத்துக்கூறியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

"தேசிய அரசு அமைக்க வேண்டுமென்றால் அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெற வேண்டும் என்று 19 ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் செப்ரெம்பர் மாதம் மூன்றாம் திகதி பிரதமர் நாடாளுமன்றில் யோசனை ஒன்றைச் சமர்ப்பித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியும் சுதந்திரக் கட்சியும் இணைந்து தேசிய அரசை அமைப்பதற்கு இணக்கம் கண்டுள்ளதால் அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அனுமதி வழங்குமாறு அந்த யோசனையில் கோரியிருந்தார். ஆனால், எத்தனை வருடங்களுக்கு தேசிய அரசு இருக்கும் என்று அவர் அதில் குறிப்பிடவில்லை.

தேசிய அரசில் இருந்து தாம் விலகுவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்துக்கு வந்து அறிவித்தால் மாத்திரமே தேசிய அரசு முடிவுக்கு வரும். அதுவரை அரசு தொடரும். எவரும் இது தொடர்பில் கேள்வி எழுப்ப முடியாது.

இதுவரை ஐக்கிய தேசிய கட்சியோ அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்போ நாடாளுமன்றத்துக்கு வந்து தாம் தேசிய அரசில் இருந்து விலகுவதாகக் குறிப்பிடவில்லை. தேசிய அரசு தொடர்ந்து இருக்கும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளர் மஹிந்த அமரவீரவும் பிரதமரும் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளனர். அப்படியென்றால் ஏன் இது தொடர்பில் தேவையற்ற கேள்விகளை எழுப்ப வேண்டும்?

இல்லாத பிரச்சினையை திட்டமிட்டு கிளப்பி மக்கள் மத்தியில் தேவையற்ற பதற்றத்தை உருவாக்கப் பார்க்கின்றனர். இதன்மூலம் அவர்கள் அரசியல் இலாபம் அடைவதற்கு முயற்சி செய்கின்றனர். மக்கள் இது தொடர்பில் விழிப்பாக இருக்க வேண்டும்" என்றும் அவர் தெரிவித்தார். (அ)



## கூண்டோடு அடைத்தாலும் வெல்லாது இந்த அரசு



கொழும்பு, பெப்.25

"மகிந்த ராஜபக்ச குடும்பத்தினர் அனைவரையும் ஒட்டுமொத்தமாக சிறையில் அடைத்தாலும் இந்த அரசால் இனி வரும் தேர்தல்களில் வெற்றி பெற முடியாது" என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்

"உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அரசு அடைந்த தோல்விக்கான உண்மையான காரணத்தைத் தேடிப் பார்க்காமல் இந்த அரசு அமைச்சரவை மாற்றத்தை ஏற்படுத்தப் போகிறது. அமைச்சரவை மாற்றம் மக்களின் பிரச்சினைக்கான தீர்வோ அல்லது தேர்தலில் வெல்வதற்கான வியூகமோ கிடையாது.

அதே ஆட்களுக்குத்தான் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன. பதவிகள் மாற்றிக் கொடுக்கப்படுகின்றனவே தவிர ஆட்கள் மாற்றப்படவில்லை. இதை மக்கள் எதிர்பார்க்கவில்லை. அரசில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்று மக்கள் கருதுவது அமைச்சரவை மாற்றத்தை அல்ல ஆட்சி மாற்றத்தை.

அரசு இதையெல்லாம் விட்டுவிட்டு தேர்தலில் தோல்விக்கான காரணத்தைத் தேட வேண்டும். ஆனால், ராஜபக்ச குடும்பத்தை சிறையில் அடைக்காததால்தான் தாம் தோல்விடைந்தோம் என்று அரசு நினைத்துக்கொண்டு இருக்கின்றது. ராஜபக்ச குடும்பத்தினர் அனைவரையும் சிறையில் அடைத்தாலும் ஒருபோதும் இவர்களால் வெற்றிபெற முடியாது" என்றார் நாமல். (அ)

## குண்டுவெடிப்பை விசாரிக்கக் குழு

கொழும்பு, பெப்.25

தியதலாவ, கஹகொல்ல பிரதேசத்தில், தனியார் பஸ்ஸுக்குள், கைக்குண்டு வெடித்து சிதறிய சம்பவம் தொடர்பில், ஆராய்வதற்காக இலங்கை இராணுவம், ஐவர் கொண்ட குழுவை நியமித்துள்ளது என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்தார். (அ)

## அமைச்சரவை மாற்றம்: ரணிலுக்குத் தலையிடி

கொழும்பு, பெப்.25

அமைச்சரவை மாற்றம் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் ஐக்கிய தேசிய கட்சி அமைச்சர்கள் பலர் தங்களுக்குப் பொருத்தமான அமைச்சுக்கள் வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு அழுத்தங்கொடுக்கத் தொடங்கியுள்ளனர்.

சிலர் அவரை நேரே சந்தித்தும் சிலர் ஊடகங்களின் வழியாகவும் இந்த அழுத்தத்தை பிரயோகிக்கத் தொடங்கியுள்ளனர். தங்களுக்குப் பொருத்தமான அமைச்சுக்கள் வழங்கப்படவில்லை என்றால் தாம் அமைச்சுப் பதவிகளை ஏற்கமாட்டோம் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

"நான் அரசியலுக்கு வந்து ஐக்கிய தேசிய கட்சியை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்காக என்து சொத்துக்களை இழந்துள்ளேன். எனக்குக் கிடைத்த அமைச்சு பெயரளவிலான அமைச்சாகும். இந்த அமைச்சரவை மாற்றத்தின்போது எனக்குப் பொருத்தமான- மக்களுக்கு சேவை செய்யக்கூடிய அமைச்சு வழங்கப்பட வேண்டும் என்று தயா கமகே தெரிவித்தார்.

"இந்தத் தேர்தலில் மக்கள் இந்த அரசுக்கு தகுந்த பாடம் புகட்டியுள்ளதால் எனக்குப் பொருத்தமான அமைச்சு வழங்கினால் மட்டுமே நான் பாரமெடுப்பேன்" என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

"இருக்கின்ற அமைச்சைக் கேட்டாலும் நான் கொடுத்து விட்டுச் செல்வேன். எந்தப் பிரச்சினையும் இல்லை. இராஜாங்க அமைச்சு ஒன்றை வழங்குவதாக பிரதமர் கூறியுள்ளார். தருவதை நான் ஏற்றுக்கொள்வேன் "என்று அமைச்சர் ஜோன் அமரதுங்க அதிருப்தியோடு தெரிவித்துள்ளார்.

இவ்வாறு மேலும் பல அமைச்சர்கள் பலமான-நிதி புரளுகின்ற அமைச்சுக்களைக் கேட்டு பிரதமருக்கு தலையிடி கொடுத்து வருவதாக உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

## நாடாளுமன்றைக் கலைத்தால் எமக்கே இரட்டிப்பு இலாபம்

### ஜே.வி.பி கணிப்பு

கொழும்பு, பெப்.25

நாடாளுமன்றம் உடனடியாகக் கலைக்கப்படுவதை தாம் விரும்புவதாகவும் அவ்வாறு கலைக்கப்பட்டால் தற்போதைய தமது எம்பிக்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரிக்கும் என்றும் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் டொக்டர்நலிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

"எமது நாட்டில் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்படும்போது அவரிடம் கட்சியின் அதிகாரமும் நாடாளுமன்றத்தின் அதிகாரமும் இருக்கும். அப்படி இல்லாமல் ஜனாதிபதி அதிகாரத்தை மாத்திரம் வைத்துக் கொண்டு எதையாவது செய்யப் போனால் எல்லாம் குழம்பிப் போய்விடும். அதுதான் இங்கே நடக்கின்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பின் நாடாளுமன்றத்தைக்கலைக்குமாறு யாராவது கோருவார்களேயானால் அவர்கள் நாட்டின் அரசமைப்புப் பற்றி எதுவும் தெரியாமல் கூறுபவர்களாகவே இருக்க முடியும். அல்லது நாட்டின் ஸ்திரத்தன்மையை சீர்குலைப்பதற்கான சதியாக இருக்கும்.

நாடாளுமன்றம் உடனடியாகக் கலைக்கப்படுவதை நாமும் விரும்புகிறோம். அவ்வாறு கலைக்கப்பட்டால் தற்போதைய தமது எம்பிக்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரிக்கும். ஆனால், அரசமைப்பில் அதற்கு இடமில்லை என்பதை நாம் அறிந்து வைத்திருப்பதால் நாமும் இவர்களைப்போல் நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறு கோரமாட்டோம்" என்றும் அவர் தெரிவித்தார். (அ)

## தொடர்ந்தும் பிரச்சினையை வளக்க நிக்கினம் நிப்பாட்டிற மாதிரி இல்லை

பிறகும் பாரன். இலங்கை அரசாங்கத்தின்ரை விளையாட்டை. லண்டனிலை பப்பிளிக்காச் சனத்தை வெருட்டின அந்த ஆமிக்காரனைத் தொடர்ச்சியாக் காப்பாற்றிறதிலைதான் நிக்கினமே ஒழிய, அவனைக் கூப்பிட்டு நீ அப்பிடிச் செய்திருக்கிறது பிழை. செய்யக்குடாது. அதுகும் லண்டனிலை. பப்ளிக்கா செய்தனி. அவைக்கு உது பிடியாது. அவை வெள்ளைக்காரர் அவை எங்களை விட ஞாயம், நீதி, நேர்மை எல்லாத்தையும் சரியாப் பாக்கிறவை. முந்தின காலமெண்டாலும் பரவாயில்லை. இப்ப கான் போனிலை படம் எடுக்கலாம். சீ.சீ.ரீ.வி கமராவிலை படம் இடுக்கலாம். அண்டைக்கு அப்பிடி எத்தினைபேர் கமரா கொண்டு வந்து படம் எடுத்தவை? அதிலை ஒருக்கா எண்டாப் பறவாயில்லை. தொடர்சியா நாலைஞ்சு தரம் கழுத்திலை கை வைச்சு "அறுப்பன்" எண்டு சொன்னதை நானும் முதலீன்ரை கான்போனிலை பாத்தனான். அதை அவையின்ரை ஆக்கள் சொல்லினம் கழுத்திலை அவருக்குக் கட்டி வந்து கிடந்திது. அதைச் சொறிஞ்சவரேயொழிய அவர் ஒருதரையும் வெட்டுவன் எண்டு வெருட்டேல்லை எண்டு.

முதலி சொல்லுறான் முள்ளிவாய்க்காலிலை உவன்தான் கனபேரைச் சுட்டவனாம். அந்தக் களிசறை வேலை செய்திட்டுப் போனதாலை அங்கையும் அந்த ஆர்ப்பாட்டக்காரரைப் பாத்தவுடனை ஆத்திரப்பட்டுத்தான் உப்பிடிக் காட்டி இருக்கிறான் எண்டு கதைக்கினம். போனவன் தன்ரை வேலையைப் பாத்திட்டு வாறதுக்கு ஏன் எம்பசிக்கு வெளியாலை போய் நிண்டு கொண்டு அறுப்பன் எண்டு காட்டி ஆக்களை வெருட்டினவன். உதாலை இலங்கை அரசாங்கத்துக்கும் இங்கிலாந்துக்கு மெல்லே பிரச்சனையாக் கிடக்கு.

துவக்கத்திலை அவர் அப்பிடிச் செய்யேல்லை எண்டு சொன்ன அரசாங்கம் பிறகு இங்கிலாந்து அரசாங்கம் கொஞ்சம் பிரச்சினை குடுக்க அவரைப் பாதுக்க வெளிக்கிட்டிட்டினம். அதாலை லண்டனிலை இருக்கிற தூதரக அதிகாரி தன்ரை பதவியை இராஜீனமாச் செய்ய வெளிக்கிட்டிட்டாராம். அதாலையும் இப்ப பிரச்சினை தொடங்கி இருக்கு. அந்த ஆமிக்காரரையும் இங்கிலாந்து அரசாங்கம் பாராட்டப்படாத நபர்கள் எண்ட ஒரு பட்டியலிலை அவற்றை பேரைச் சேத்திருக்கினமாம். உதாலையும் இப்ப கேஸ் இறுகிப் போட்டிது. அதாலை அவரைத் திருப்பி வரச் சொல்லி இலங்கை அரசாங்கம் கூப்பிட்டிருக்கு.

சினிமாப் படத்திலை வாற முக்கிய காட்சி மாதிரி உதிலையும் வந்த ஒரு முக்கியமான விசியத்தை கேளுங்கோவன். அவர் இப்ப இரண்டு நாளைக்கு முன்னம் இலங்கைக்கு வந்து கட்டு நாயக்காவிலை இறங்கினவராம். அவர் தமிழ் ஆக்களின்ரை கழுத்தை அறுப்பன் எண்டு காட்டிப் போட்டு வாறதாலை அவரை ஒரு வீரன் எண்டும் தீரன் எண்டும் பாராட்டி வரவேற்கிறதுக்காக அப்ப அங்கை கொஞ்சப் பிக்குமாரும், சிங்கலே எண்ட அமைப்பும் போய் கட்டுநாயக்காவிலை காத்து நிண்டவையாம். ஆனால் அவரைக் கூப்பிட வந்தவை அவரை ஒரு கறுத்தக் கண்ணாடி போட்டட வான் ஒண்டிலை ஏத்திக் கொண்டு போனதாலை பிக்குமார் திட்டிக் கொண்டு போனவை எண்டதுதான் அந்த முக்கியமான படக் காட்சி. இனவாதம் எங்கை போய் நிக்கிது பாத்தீங்களே?

கழுத்தை அறுப்பன் எண்டு சொன்னவனுக்கு வரவேற்பும் பொன்னாடையும். எப்பிடி இருக்கு உலகம்? ஏன் எங்கடை பக்கத்திலையும் கழுத்தறுப்புச் செய்யிறவைக்கும் பொன்னாடை போக்கிறது வழமைதானே?

**- வில்லங்கம் விநாசி**

# IDM விளையாட்டுப் பெருவிழா சிறக்க வாழ்த்துவோர்

கணணி உயர் கல்வியினை இலங்கைத்தீவிற்கு 1974இல் அறிமுகப்படுத்திய எனது தந்தையாரின் நீண்ட தூர கனவினை இன்று இலங்கையின் உச்ச வடக்கில் காண்கிறேன் அமைதியுடன் ஆனந்தம் அடைகின்றேன். இதற்காக உழைத்த உள்ளூர் வர்த்தகப் பெருமக்களிற்கு பெரும் நன்றிகள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**Dr.பிரியங்க ரணதுங்க**
Members of Board Directors–IDM

கடந்த பல ஆண்டுகளாக பல சிரமத்தின் மத்தியிலும் எமது மாணவர்களுக்கான கணினி உயர்கல்வி சரிவர கிடைத்திட வேண்டும் என்ற எண்ணத்தில் ஐடிஎம்(IDM) இன் மானிப்பாய் வளாகத்தினை நடத்திக் கொண்டிருகின்றோம். எமது வடமராட்சி வளாகமாக உருவெடுத்த ஐடிஎம் (IDM) நெல்லியடி வளாகத்தினதும் அதன் மாணவர்களினதும் இம் முன்னெடுப்பிற்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் IDMஇன் யாழ் மாவட்டத்திற்கான வளாகங்களான மானிப்பாய் மற்றும் சுன்னகத்துடன் இணைவதில் பெருமிதம் கொள்கிறோம். இவ்விழா சிறக்க ஏற்பாட்டுக்குழு மற்றும் வீரர்களுக்கு வாழ்த்துக்கள்.

**திரு.துஷ்யந்தன் மஹேந்திரா**
**பிரதேச முகாமையாளர்- வடக்கு மாகாணம்**
**ஐடிஎம் அச்சீவேர்ஸ் இன்ரெனசனல் கேம்பஸ்**
(IDM ACHIEVERS INTERNATIONAL CAMPUS)

கல்வியே எங்கள் கண்ணென்று எமது இளம் மாணவர்களின் விளையாட்டு விழாவின் அனுசரணையாளராக இருப்பதில் நாம் பெரிதும் உவகை அடைகின்றோம். IDM நெல்லியடி மாணவர் ஒன்றியத்திற்கு மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்து கொள்கின்றோம். மேலும் பல் சேவைகளை ஐடிஎம் (IDM) நெல்லியடி வளாகமும், மாணவர் ஒன்றியமும் நிகழ்த்த வேண்டும் எனகேட்டு கொள்கின்றோம்.

**ச.பிரேம்குமார்**
**செல்லமுத்துஸ் ரெக்ஸ்டைல்ஸ்**

ஐடிஎம் (IDM) நெல்லியடி வளாகத்தின் வளர்ச்சியினையிட்டு எமது சார்பில் பாராட்டுகளைதெரிவித்து கொள்கின்றோம், எமது பிரதேசத்தில் முதன் முறையாக ஒரு தனியார் உயர் கல்விவளாகமானது இப்பிரதேசத்தை சேர்ந்த மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக இப் பாரிய விளையாட்டு விழாவை முன் எடுத்துள்ளது வரவேற்கதக்க விடயமாகும்.

**முரளிதரன்**
**தொழில்நுட்ப ஆலோசகர்**
**(முரே என்ஜினியரிங்)** MUREEY ENGINEERING

ஐடிஎம் (IDM) இளம்தலைமுறை முன்னெடுக்க இருக்கும் இவ் விளையாட்டு விழாவிற்கு நாம் அனுசரணை செய்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம். மேலும் இது போன்ற பல ஆரோக்கியமான நிகழ்வுகளை நிகழ்த்த வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம். ஐடிஎம். நெல்லியடி கம்பஸ் (IDM Nelliady Campus) மற்றும் ஐடிஎம் நெல்லியடி (IDM Nelliady) மாணவர் ஒன்றியம் நடாத்தும் நிகழ்வுகள் அனைத்திற்கும் எமது பேராதரவு ஆயுட்காலம் வரைதொடரும். வாழ்த்துக்கள்.

**வ.சிவராஜ்**
**ராஜ் கிறபிக்ஸ்.**


ஐடிஎம் (IDM) நெல்லியடி வளாகமானது மாணவரின் ஆற்றலை அதிகரிக்கும் வகையில் விளையாட்டு விழாவினை முன்னெடுத்துள்ளது. இதற்கு அனுசரணை செய்வதில் நாம் மிகுந்தஆனந்தம் அடைகின்றோம். இவ் விளையாட்டுவிழா சிறக்க எல்லாம் வல்ல ஆண்டவன் அருள்புரியட்டும்.

**கு.விஜய்ஆனந்த் நேரு ஸ்டுடியோ**

யாழ்ப்பாணத்தின் கரணவாய் கொலின்ஸ் மைதானத்தில் IDM இன் நெல்லியடி, மானிப்பாய், சுன்னாகம் வளாக மாணவர்களால் முன்னேடுக்கப்படும். விளையாட்டுவிழா மிகவும் வரவேற்கத்தக்க விடயம். கிருபா லேனேர்ஸ் தனது வாழ்த்துக்கள் குறிப்பிட்ட மாணவர்களிற்கு தெரிவிப்பதில் பெருமிதம் அடைகின்றது.

**பு.சுஜீவன்**
**அப்பு பில்டேர்ஸ்**



## லொறி தடம்புரண்டதில்
# ஒருவர் மரணம்

திருகோணமலை - அநுராதபுரம் பிரதான வீதியில் முதலிக்குளம் பகுதியில் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். லொறி ஒன்று கட்டுப்பாட்டை இழந்து பாதையில் புரண்டதனாலேயே குறித்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்தில் படுகாயமடைந்த லொறி ஓட்டுனர் உட்பட மற்றுமொருவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை முதலிக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)




பிரபல அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசுவின் 'பூகோளவாதம் புதிய தேசியவாதம்' நூல் வெளியீட்டு விழா நேற்று இடம்பெற்றபோது...

# ஜெனிவா சூட்டை தணிக்க தீவிர முயற்சிகளில் அரசு

காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகம் தொடர்பான சட்டம் நாடாளுமன்றத்தில் மார்ச் 7ஆம் திகதி விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

ஏற்கனவே, இந்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படுவது இரண்டு தடவைகள் ஒத்திவைக்கப்பட்ட நிலையில் மீண்டும் அது விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற வருடம் மார்ச் 7ஆம் திகதி இந்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது, பின்னர் ஜூலை 5 மற்றும் செப்ரெம்பர் இல் இது விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்ட போதும் பல்வேறு குழுக்களின் எதிர்ப்புகளால் அது கைவிடப்பட்டது.

நாளை ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 37 ஆவது அமர்வில் சிறிலங்கா தொடர்பான முக்கிய விவாதங்கள் இடம்பெறவுள்ள நிலையிலேயே இந்த காணாமல் போனோர் பணியக சட்டத்தை நாடாளுமன்றத்தில் விவாதிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.(இ)

## இன்றைய கேலிச்சித்திரம்




# தோணிகள் எரிப்பு

மட்டக்களப்பு, பெப்.25

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை, முனைக்காடு பகுதி மீனவர்களின் தோணிகள் இனந் தெரியாதவர்களினால் எரியூட்டப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மகிழடித்தீவு ஆற்றுப்பகுதியில் தரித்து நிற்கவைக்கப்பட்டிருந்த மூன்று மீனவர்களின் தோணிகளே இவ்வாறு நேற்றுமுன்தினம் இரவுஎரியூட்டப்பட்டுள்ளன.

இது தொடர்பில் தோணி உரிமையாளர்களினால் கொக்கட்டிச் சோலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கொக்கட்டிச் சோலை பொலிஸார் மேலதிக விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# தொடர்ச்சிகள்

**சி.ஐ.டியினரின்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காசம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்ட இந்த நிகழ்வு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் திருநாவுக்காரசின் பால்ய நண்பர் வண. பிதா ஜே.ஈ.ஜெயசீலன் நூலை வெளியிட, குழுந்தை மா.சண்முகலிங்கம் முதல் பிரதியைப் பெற்றார்.

வட மாகாணசபை உறுப்பினர்களான பொ.ஐங்கரநேசன், எம்.கே.சிவாஜிலிங்கம், பா.கஜதீபன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ. கஜேந்திரன், ஈ.பி.ஆர்.எல்.எவ்பின் தலைவர் சுரேஸ் பிறேமச்சந்திரன், ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பெ.சந்திரசேகரம், மற்றும் அரசியல் எழுத்துலகப் பிரபலங்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்ட இந்நிகழ்வில் சி.ஐ.டியினர் நால்வர் பின்வரிசையில் அமர்ந்து நிகழ்வைப் பார்வையிட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தொடர்பாக மு.திருநாவுக்கரசு வெளியிட்ட கருத்துத் தொடர்பில் அரசாங்கம் சற்றுக் கடுமை காட்டி வருவது குறிப்பிடத்தக்கது. (ச)

**வாக்குறுதிகளை...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேம்படுத்தும் பிரேரணை தொடர்பில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் அவர்களின் அறிக்கையை வரவேற்கின்றது.

தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முகமாகவும் நிலையான சமாதானத்தை ஏற்படுத்தும் முகமாகவும் இலங்கை அரசாங்கமானது சர்வதேசத்திற்கு வழங்கிய உத்தரவாதங்களை கடுமையாகப் பின்பற்ற வேண்டுமென நாம் வலியுறுத்தி நிற்கின்றோம்.

இந்த உத்தரவாதங்களிலிருந்து விலகக் கூடாது எனவும் இந்நாட்டு மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் இலங்கை அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டுமெனவும்நாம்அரசாங்கத்திடம்வேண்டுகோள்விடுக்கின்றோம். ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளரின் முன்மொழிவுகளை முழுமையாக வரவேற்கின்ற அதேவேளை, இலங்கை அரசாங்கத்துடன் பயனுறுதிமிக்க, நெருங்கிய அவதானிப்பையும் செலுத்துமாறு அங்கத்துவ நாடுகளிடம் நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

பயங்கரவாதத்தடுப்புச்சட்டத்தை நீக்குதல், பொதுமக்களின் காணிகள் விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைகள், அரசியல் கைதிகளின் விடுதலை போன்ற விடயங்கள் தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வந்துள்ளன. ஆனால், இவ்விடயங்கள் தொடர்பில் மந்தகதியான அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தமிழ் மக்கள் மத்தியில் அதன் நடவடிக்கைகளில் காணப்படும் நம்பகத்தன்மை குறித்து பாரிய கரிசனையைத் தோற்றுவித்துள்ளது.

மேற்குறித்த விடயங்கள் தொடர்பிலும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவை ஆணையாளரின் முன்மொழிவுகள் தொடர்பிலும் இலங்கை அரசாங்கமானது பொறுப்புக்கூறலுடன் நடந்து கொள்வதனை உறுதி செய்யுமாறு சர்வதேச சமூகத்திடம் நாம் மிக வினயமாகக் கேட்டுக் கொள்ளுகின்றோம். அத்தோடு, இணை அனுசரணை வழங்கிய ஐ.நா.மனித உரிமைப் பேரவையின் தீர்மானத்தினை, துரித நடவடிக்கைகளை எடுத்து எவ்வித தாமதங்களுமின்றி முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு நாம் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

ஐ.நா.மனித உரிமைப் பேரவை ஆணையாளருக்கு எமது நன்றிகளைத் தெரிவிக்கின்ற அதேவேளை இந்த முன்மொழிவுகளுக்கு இலங்கை அரசாங்கம் தான் வழங்கிய வாக்குறுதிகளின் அடிப்படையில் முக்கியத்துவம் கொடுத்து நடைமுறைப்படுத்துவதனை ஐ.நா.மனித உரிமை ஆணையாளரின் அலுவலகம், சர்வதேச அமைப்புக்கள் மற்றும் ஏனைய அங்கத்துவ நாடுகள் உறுதி செய்ய வேண்டுமென அதிகமாகப் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களின் சார்பில் நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம்." - என்று அந்த அக்கட்சி விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ச)

**மனித...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடைச்சட்டத்தை நீக்குதல் மற்றும்அதன் கீழ் - நிலுவையில் உள்ள வழக்குகளை தீர்த்தல் என்பவற்றை செயற்படுத்துவதில், இலங்கையில் போதுமான முன்னேற்றங்கள் இல்லை என்றும் அவர் சாடினார்.

ஐ.நா மனித உரிமை பேரவையின் 37 ஆவது கூட்டத்தொடர் நாளை மறுதினம் ஆரம்பமாகி மார்ச் 23 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தொடர் தொடர்பில் ஆணையாளர் சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. (ச)

**இலங்கைக்கான...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புப் பிரதிநிதி நேற்று அதிகாலை இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

54 வயதான உனா மக்கோலி, மருத்துவ விடுப்பில் சென்று சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே காலமானார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான ஐ.நாவின் முதல் பெண் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக பணியாற்றிய உனா மக்கோலி இலங்கையில் ஐ.நாவின் 21 அமைப்புகளுக்கு தலைமை தாங்கியிருந்தார்.

இலங்கையில் 6 வருடங்களாப் பணியாற்றிய உனா, 2 ஆண்டுகள் யுனிசெவ் பிரதிநிதியாகவும், ஐ.நா. வதிவிட இணைப்பாளர் மற்றும் ஐ.நா அபிவிருத்தி திட்டப் பிரதிநிதியாகவும் பணியாற்றியிருந்தார். ஐ.நாவில் 17 ஆண்டுகள் பணியாற்றிய உனா மக்கோலி, 7 ஆண்டுகள் சிறுவர் அபிவிருத்தி தொடர்பான பணிகளில் ஈடுபட்டிருந்தார்.

அயர்லாந்தைச் சேர்ந்த உனா மக்கோலி இரண்டு பிள்ளைகளின் தாயாராவார். இவரது மரணம் ஆழ்ந்த துயரத்தை தருவதாக ஐ.நா குறிப்பிட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இரங்கல் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.
(இ)

**முதல்வரின்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விருந்தினராகப் பங்கேற்றிருந்தார்.

அவர் உரையாற்ற முற்பட்டபோது, ஒலி வாங்கி மேசையின் கீழ் உயரத்துக்காகப் போடப்பட்ட சோடா கேஸின் மீதேற வேண் டியிருந்தது. சோடா கேஸின் பாகங்கள் அவருக்கு நோவைக் கொடுக்கவே அதிலிருந்து தள்ளாடியபடியே இறங்கினார் முதலமைச்சர்.அருகில் நின்ற பாதுகாவலரிடம் தனது காலணியை எடுத்துத் தருமாறு இயலாமையுடன் கோர, அவர் அதனைக் கைகளில் ஏந்திச் சென்று கொடுத்திருந்தார். இந்த விடயத்தை அங்கிருந்த எழுத்துலகப் பிரபலங்களில் ஒருவர் அதனை தனது முகநூலில் விமர்சித்திருந்தார். இந்த விவகாரம் பெரும் சர்ச்சையை கிளப்பி வருகிறது. (ச)

**விஜயதாச...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விடயம் தொடர்பில் கடந்த வாரம் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் விஜயதாச ராஜபக்ஷவிற்கும் இடையில் இரகசிய சந்திப்பு இடம்பெற்றதாகவும் கூறப்படுகின்றது. விஜயதாச ராஜபக்ஷ, நல்லாட்சி அரசாங்கத்தின் ஆரம்பத்தில் நீதி மற்றும் புத்த சாசன அமைசசராக இருந்தார். அவருக்கு எதிராக சிலர் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வர முயன்றபோது தனது பதவியை இராஜினாமா செய்திருந்தார் என்பது குறிப்பிடதக்கது. (இ)

**கூட்டமைப்பின்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுதொடர்பாக ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட அவர், 'உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பின்னர் பல சபைகளில் தொங்கு நிலை காணப்படுகின்றது. எந்தக் கட்சியும் ஆட்சி அமைக்க முடியாத நிலையில் வடக்கில் சில சபைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிர்வாகம் நடத்தத் தெரிவுகளை நடத்தி வருகின்றது.

அக்கட்சி சபைகளில் ஆட்சியமைக்க ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி வெளியில் இருந்து ஆதரவு வழங்கும். மக்களுக்கு நன்மையளிக்கும் விடயங்களையே ஆதரிப்போம். பிழையான விடயங்களை செய்தால் எதிர்ப்போம். - என்றும் அவர் கூறினார். (ச)

# கார்த்திக் சுப்புராஜோடு கை கோர்க்கும் ரஜினி

சென்னை, பெப்.25

ரஜினிகாந்தின் அடுத்த படத்தை பீட்சா, இறைவி, ஜிகர்தண்டா படங்களை இயக்கிய கார்த்திக் சுப்புராஜ் இயக்குவார் என அறிவிக்கப் பட்டுள்ளது. இந்தப் படத்தை சன் பிக்சர்ஸ் தயாரிக்கிறது.

நடிகர் ரஜினிகாந்த் தற்போது ரஞ்சித் இயக் கத்தில் 'காலா' படத்திலும் ஷங்கர் இயக்கத்தில் '2.0' படத்திலும் நடித்து முடித்திருக்கிறார்.

முன்னதாக, '2.0' படம் ஏப்ரல் மாதம் வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அந்தப் படத்தின் 'கிராபிக்ஸ்' பணி கள் முடிவடையாததால், '2.0' வெளியாவது தள்ளிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதையடுத்து 'காலா' திரைப்படம் ஏப் ரல் 27ஆம் திகதி வெளியாகுமென அறிவிக் கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், அரசியல் கட்சி ஒன் றைத் தொடங்கவிருப்பதாக அறிவித்திருக் கும் ரஜினிகாந்த், இது தொடர்பான பணிகளில் தீவிரமாக இருக்கிறார்.

இந்நிலையில்தான் அவரது புதிய படத்திற் கான அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதனை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தனது ருவிட்டர் பக் கத்தில் தெரிவித்துள்ளது. அஜீத் நடித்த மங்காத்தா படத்தை துரை தயாநிதி தயாரிக்க, அதனை வெளியிட்டது சன் பிக்சர்ஸ்.

அதற்குப் பிறகு நீண்ட நாட்களாக படத் தயாரிப்பிலிருந்து விலகியிருந்த அந்த நிறுவனம் தற்போது விஜய்யின் 62-ஆவது படத்தை ஏ. ஆர். முருகதாஸ் இயக்கத்தில் தயாரித்துவருகிறது.

தற்போது ரஜினியின் படத்தைத் தயா ரிப்பதாக அறிவித்துள்ளது. (அ)







# மன்னிப்புக் கேட்ட கே.எப்.சி

லண்டன், பெப்.25

பிரிட்டனில் கே.எப்.சி நிறுவனம், வாடிக்கையாளர்களிடம் வருத்தம் தெரி விக்கும் வகையில் நேற்று வெளியிட்ட விளம் பரம் வைரலாகப் பரவிவருகிறது.

பிரிட்டனில் கே.எப்.சி நிறுவனத்துக்கு ஜேர்மனியை சேர்ந்த நிறுவனம் கோழி இறைச்சியை வழங்கி வருகிறது. சில நாட் களாக குறைவான அளவு கோழி இறைச் சியே வழங்கப்பட்டு, தற்போது அது முற் றாக நிறுத்தப்பட்டுள்ளதால், 700 முதல் 900 வரையிலான கே.எப்.சி கடைகள் தற் காலிகமாக மூடப்பட்டுள்ளன. தற்போது நிலைமை சரிசெய்யப்பட்டு வருவதாக நிறு வனம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு வருத்தம் தெரிவிக்கும் வகை யில் தனது கே.எப்.சி எனும் பெயரையே மாற்றி எப்.சி.கே என வெளியிட்ட விளம் பரம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்த தோடு அல்லாமல் சமூக வலைதளங் களிலும் பாராட்டைப் பெற்றுள்ளது.

"வாடிக்கையாளர்களின் சிரமத்துக்கு வருந்துகிறோம், விரைவில் நிலைமையை சுமுகமாக்க கே.எப்.சி குழுவினர் முழு மூச்சில் ஈடுபட்டுள்ளனர்" எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# இரட்டை வெடிகுண்டு 18 பேர் உயிரிழப்பு

மொகடிஸ், பெப்.25

சோமாலியா நாட்டின் மொகடிஸ் நகரில் நிகழ்த்தப்பட்ட இரட்டைக் கார் வெடிகுண்டு தாக்குதல்களில் 18 பேர் கொல்லப்பட்டனர்.

கிழக்கு ஆபிரிக்க நாடான சோமா லியா தலைநகர் மொகடிஸில் உள்ள அரசு அலுவலகங்களை குறிவைத்து நேற்றுமுன்தினம் அடுத்தடுத்து இரண்டு இடங்களில் வெடிகுண்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்த இரட்டைக் கார் வெடிகுண்டு தாக் குதல் சம்பவங்களில் 18 பேர் கொல்லப்பட்டனர். மேலும், 20 க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந் தனர்.

இந்தத் தாக்குதல்களுக்கு உடனடி யாக எந்தவொரு அமைப்பும் இது வரை பொறுப்பேற்கவில்லை.

ஏற்கனவே, கடந்த ஒக்ரோபர் மாதத்தில் மொகடிஸ் நகரில் அல் ஷ பாப் தீவிரவாதிகள் வெடிபொருள் நிரப்பிய வாகனத்தை வெடிக்கச் செய்ததில் சுமார் 500-க்கு மேற்பட் டோர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# 10 இலட்சம் ஆசிரியர்களுக்கு ஆயுதப் பயிற்சி

வோஷிங்டன், பெப்.25

10 லட்சம் ஆசிரியர்களுக்கு துப்பாக்கிப் பயிற்சி அளிக்க அமெரிக்கா தயாராகி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக வெள்ளை மாளிகை தரப்பில், "அமெரிக்காவின் கூட்டாட்சி அரசு அமெரிக்கா முழுவதும் 10 இலட்சம் ஆசிரி யர்களுக்கு துப்பாக்கிப் பயிற்சி வழங்கத் தயாராகி வருகிறது" என்று கூறியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அமெரிக் காவில் பள்ளி ஆசிரியர்களுக்கு துப்பாக்கி வழங்கப்படும் என்று கூறியதைத் தொடர்ந்து தற்போது இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவின் புளோரிடாவில் கடந்த சில நாட்களுக்கு முன் இடம்பெற்ற துப் பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து, அவ் வாறான சம்பவங்களைத் தடுக்க அமெரிக்க அரசு சில நடவடிக்கைகளை முன்னெடுத் துள்ளது. இதன் ஒரு கட்டமாகவே சுமார் 10 இலட்சம் ஆசிரியர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கி, அவர்களுக்கு துப்பாக்கிகள் வழங் கப்படவுள்ளன. (அ)

# நேபாளத்தில் தேர்தல்



காட்மண்ட், பெப்.25

நேபாளத்தில் அடுத்த ஜனாதிபதியைத் தேர்வு செய்வதற்கான தேர்தல் மார்ச் மாதம் 13 ஆம் திகதி நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தில் கடந்த டிசம்பரில் நாடா ளுமன்ற பொதுத்தேர்தல் நடந்தது. இதில் இடதுசாரிக் கூட்டணி வெற்றி பெற்றது. இதைத் தொடர்ந்து நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் சர்மா ஒளி பிர தமராகப் பதவியேற்றார்.

தற்போதைய ஜனாதிபதி வித்யா தேவி பண்டாரி, துணை ஜனாதிபதி நந்தா பக தூர் ஆகியோரின் பதவிக் காலம் விரை வில் நிறைவடைகிறது. இதைத் தொடர்ந்து ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது தொடர்பாக தலைமைத் தேர்தல் ஆணை யம் அனைத்து கட்சிகளுடனும் நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தியது.

இதுகுறித்து நேபாளத் தேர்தல் ஆணைய செய்தித் தொடர்பாளர் நவராஜ் கூறியதாவது,

"மார்ச் 13 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும். ஒரு வாரத்துக்குப் பிறகு துணை ஜனாதிபதித் தேர்தல் நடத் தப்படும். இந்தத் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டப்பேரவை உறுப் பினர்கள் மட்டுமே வாக்களிக்க முடியும்" இவ்வாறு அவர் தெரிவித்தார். (அ)

# நன்றி சொல்ல உனக்கு..!



ஜெருசலேம், பெப்.25

இந்த வருடம் மே மாதம் ஜெருசலேமில் அமெரிக்கத் தூத ரகம் அமைக்கப்படும் என்ற அமெரிக்காவின் அறிவிப்புக்கு இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் தற்போது உள்ள ஜெருசலேம் நகரமானது யூதர்கள், கிறிஸ்த வர்கள் மற்றும் இஸ்லாமியர் களின் புனிதத் தலமாக உள்ளது. 1967ஆம் ஆண்டு நடைபெற்ற மத்திய கிழக்கு போரின்போது ஜெருசலேம் நகரை பாலஸ்தீனத்திடம் இருந்து இஸ்ரேல் கைப்பற்றியது. இதனையடுத்து, 1980 ஆம் ஆண்டில் இருந்து அந்நகரை தன்னுடன் இணைத்து இஸ்ரேல் நிர்வகித்து வருகிறது. எனினும், ஜெருசலேம் நகரம் இஸ்ரேலால் ஆக்கிர மிக்கப்பட்ட நகராகவே கருதப்பட்டு வருகிறது.

தனது ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத் தின் போது, ஜெருசலேமில் அமெரிக்கத் தூதரகம் அமைக்கப்படும் என ட்ரம்ப் குறிப்பிட்டிருந்தார். அதன் தொடர்ச்சி யாக, ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகரமாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் கடந்த ஆண்டு டிசெம்பரில் அறிவித்தார்.

இதற்கிடையே, வரும் மே மாதம் ஜெருசலேமில் அமெரிக்க தூதரகம் செயற்படத் தொடங்கும் என வெள்ளை மாளிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், "ஜெருசலேமில் அமெரிக்கத் தூதரகம் செயல்பட தொடங்கும் நாள் இஸ்ரேல் மக்களுக்குச் சிறப்பான நாள். இந்த அறிவிப்பு இஸ்ரேலின் 70 ஆவது சுதந்திர தினவிழாக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும். அமெரிக்கா வின் இந்த முடிவுக்கு நன்றி" எனத் தெரி வித்துள்ளார். (அ)

# இந்திய அறிக்கைக்கு மாலைதீவு கண்டனம்



மாலைதீவு, பெப்.25


நெருக்கடி நிலை நீட்டிப்பு விவகாரத்தில் தங்கள் நாட்டில் உள்ள உண்மையான களநில வரம் தெரியாமல் இந்தியா கருத்து தெரிவித் துள்ளதாக மாலைதீவு அரசு குற்றம்சாட்டியுள்ளது.

மாலைதீவில் நெருக்கடி நிலையை நீட் டிக்க நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்தது குறித்து இந்தியா நேற்று முன் தினம் அதி ருப்தி தெரிவித்திருந்தது. நெருக்கடி நிலையை மேலும் ஒருமாத காலம் நீட்டிக்கும் அளவுக் கான அவசியச் சூழல் மாலைதீவில் ஏற்பட வில்லை என்றும் இந்தியா குறிப்பிட்டிருந்தது.

இந்நிலையில், மாலைதீவின் உண்மையான களநிலவரம் தெரியாமல் கருத்து தெரிவித் துள்ளதாக இந்தியாமீது மாலைதீவு அரசு குற்றம்சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக, அந்நாட்டின் வெளி யுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், உண்மைகளையும் களநில வரங்களையும், தங்கள் நாட்டு அரசியல மைப்பு சட்டத்தையும் புறக்கணித்துவிட்டு இந்தியா அறிக்கை வெளியிட்டுள்ளது.

வரலாற்றில் மிகவும் நெருக்கடியான காலக் கட்டத்தை நாங்கள் சந்தித்து வருகிறோம் என்பதில் எவ்வித சந்தேகத்துக்கும் இடமில்லை. எனவே, இந்தச் சூழ்நிலையை எதிர்கொள்ள எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்படுவதை இந்தியா உள்ளிட்ட நட்புநாடுகள் தவிர்க்க வேண் டும்" என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட் டுள்ளது. (அ)




# கோஹ்லி சறுக்கல்

சர்வதேச கிரிக்கெட் சபையின் ரி-20 போட்டி தரப்படுத்தலில் இந்திய அணியின் தலைவர் விராட் கோஹ்லி கீழிறங்கியுள்ளார்.

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான முதலிரு ரி-20 ஆட்டங்களிலும் கோஹ்லி பெரியளவில் ஓட்டங்களைக் குவிக்கவில்லை. இதையடுத்து, கடந்த சில மாதங்களாக தரப்படுத்தலில் முதலிடத்தில் இருந்து வந்த அவர் தற்போது பின்னடைவைச் சந்தித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வெளியான புதிய தரப்படுத்தலின் படி கோஹ்லிக்கு மூன்றாவது இடம் கிடைத்துள்ளது.

பாகிஸ்தான் அணியின் வீரர் அசாம் 786 புள்ளிகளுடன் முதலிடத்துக்கு முன்னேறினார். அவுஸ்ரேலிய அணியின் வீரர் பின்ஞ் 784 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தைத் தக்கவைத்துள்ளார். கோஹ்லி 776 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலுள்ளார். (ச)

# ரஷ்யாவுக்கு தங்கம்

சியோல், பெப். 25

குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் ரஷ்யா முதல் தங்கத்தை வென்றுள்ளது.

நேற்றுமுன்தினம் நடந்த பெண்களுக்கான தனிநபர் பிகர் ஸ்கேட்டிங்கில் 15 வயதேயான ஜாகிடாவோ தங்கம் வென்றார்.

இதுவரை ரஷ்யா 5 வெள்ளி, 8 பதக்கங்க்ளை வென்றமை குறிப்பிடத்தக்கது.



# சமனில் முடிந்தது 'வீரர்களின் போர்"

யாழ்ப்பாணம், பெப். 25

'வீரர்களின் போர்" என வர்ணிக்கப்படும் மகாஜனக் கல்லூரி - ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிகளின் கிரிக்கெட் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

தெல்லிப்பழை மகாஜன - சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிகளின் அணிகளிடையே இரு நாள் கொண்ட கிரிக்கெட் போட்டி வருடா வருடம் நடைபெறுகிறது.

வீரர்களின் போர் என சிறப்பிக்கப்படும் இந்தப் போட்டி நேற்றுமுன்தினம் மகாஜனக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வென்ற தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

துடுப்பெடுத்தாடிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 69.1 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 234 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அஜிதன் 55 ஓட்டங்களையும், நிதர்ஜன் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தயுஸ்ரன் 7 விக்கெட்களையும், சதுர்ஜன் 2 விக்கெட்களையும், பகீரதன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி முதல் நாள் முடிவில் 29 ஓவர்களில் 2 விக்கெட்களை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது. ஜெனிசன் 32 ஓட்டங்களுடனும், பகீரதன் 4 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இரண்டாம் நாளான நேற்று ஆட்டத்தைத் தொடர்ந்த மகாஜனக் கல்லூரி அணி 225 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. ஜெனிசன் அதிகபட்சமாக 57 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியின் சார்பில் டிலக்சன் 3 விக்கெட்களையும், டயன்சன், தனுசன் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும், சோபிதன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

9 ஓட்டங்களால் முன்னிலை வகித்த ஸ்கந்தவரோதயக் கல்லூரி இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்தது. 130 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்தநிலையில் ஆட்டநேரம் முடிவுக்கு வந்தது. இதனால் ஆட்டம் சமநிலையில் முடிந்தது. அதிகபட்சமாக நிகஜன் 34 ஓட்டங்களையும், சோபிதன் 19 ஓட்டங்களையும், தனுஸ்ரன் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சுஜீவன் 5 விக்கெட்களையும், டினேஸ் 2 விக்கெட்களையும், தனுஸ்ரன், சுஜன் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் சிறந்த களத் தடுப்பாளராக ஸ்கந்தவரோதயக் கல்லூரி வீரர் பிரசன், ஆட்டநாயகனாகவும், சிறந்த பந்துவீச்சாளராகவும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் தயுஸ்ரன், சிறந்த துடுப்பாட்ட வீரராக மகாஜனவின் யனுசன், சகலதுறை வீரராக சுஜீவன் ஆகியோர் தெரிவாகினர். (ச - 25)

# லெகான்ஸை வீழ்த்தி ரியல் மட்ரிட் அபாரம்

ரியல்மட்ரிட், பெப். 25

ஸ்பானியக் உதைபந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரின் ஆட்டமொன்றில் ரியல் மட்ரிட் அணி அபார வெற்றிபெற்றது.

ஸ்பானியக் உதைபந்தாட்டக் கழகங்களுக்கு இடையில் நடைபெறும் மிகவும் பழமை வாய்ந்த தொடர் லா லிகா. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ரியல் மட்ரிட்டை எதிர்த்து லெகான்ஸ் மோதியது.

ஆட்டத்தின் 6ஆவது நிமிடத்தில் பஸ்ரினா, லெகான்ஸின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். மட்ரிட்டுக்குப் பேரிடியாக இந்தக் கோல் அமைந்தது. ஆட்டத்தின் 11ஆவது நிமிடத்தில் லூகாஸ் மட்ரிட்டின் கோலைப் பதிவுசெய்து கோல் கணக்கை 1:1 என்றாக்கினார்.

29ஆவது நிமிடத்தில் காஸ்மிரோ மட்ரிட்டின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். வேறெந்தக் கோல்களும் முதல் பாதியில் பதிவாகவில்லை. 2:1 என்று ரியல் மட்ரிட்டின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாவது பாதியிலும் மட்ரிட் நீண்டு ஆதிக்கம் செலுத்திச் சென்றது. ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் அபாரமான கோலொன்றைப் பதிவுசெய்தார் அணித் தலைவர் ராமோஸ். முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட் அணி வெற்றிபெற்றது.




# நியூசிலாந்து – இங்கிலாந்து தொடர் இன்று

இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

இங்கிலாந்து அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

ஹமில்டன் மைதானத்தில் இலங்கை நேரப்படி காலை 6.30 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. தொடரின் ஏனைய ஆட்டங்கள் முறையே பெப்ரவரி 28, மார்ச் 3, மார்ச் 7, மார்ச் 10 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளன.

NEW ZEALAND CRICKET

ECB

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 25.02.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.